# நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 8-7 - இருத்தும்

**(தம்மிடம் வந்து தாம் எண்ணியபடி எல்லாம் எம்பெருமான் கலக்க, அந்தக் கலவியை 'மயக்கமோ?' என ஐயமுற்று, உண்மையெனத் தெளிந்து ஆழ்வார் எம்பெருமானது குணங்களைப் பேசுதல்)**

3513 * இருத்தும் வியந்து என்னைத் * தன் பொன்னடிக் கீழ் என்று *
அருத்தித்து எனைத்தோர் * பலநாள் அழைத்தேற்கு **
பொருத்தமுடை * வாமனன் தான் புகுந்து * என்தன்
கருத்தையுற * வீற்றிருந்தான் கண்டு கொண்டே 1

3514 இருந்தான் கண்டு கொண்டு * எனதேழை நெஞ்சாளும் *
திருந்தாத ஓரைவரைத் * தேய்ந்தற மன்னி **
பெருந்தாள் களிற்றுக்கு * அருள் செய்த பெருமான் *
தருந்தான் அருள் தான் * இனி யான் அறியேனே 2

3515 அருள் தான் இனி யான் அறியேன் * அவன் என்னுள்
இருள் தான் அற * வீற்றிருந்தான் இதுவல்லால் **
பொருள் தான் எனின் * மூவுலகும் பொருளல்ல *
மருள் தான் ஈதோ? * மாய மயக்கு மயக்கே 3

3516 மாய மயக்கு மயக்கான் * என்னை வஞ்சித்து *
ஆயன் அமரர்க்கு * அரியேறு எனதம்மான் **
தூய சுடர்ச் சோதி * தனதென்னுள் வைத்தான் *
தேசம் திகழும் * தன் திருவருள் செய்தே 4

3517 திகழும் தன் திருவருள் செய்து * உலகத்தார்
புகழும் புகழ் * தானது காட்டித் தந்து ** என்னுள்
திகழும் * மணிக்குன்றம் ஒன்றே ஒத்து நின்றான் *
புகழும் புகழ் * மற்றெனக்குமோர் பொருளே? 5

3518 பொருள் மற்றெனக்குமோர் பொருள் தன்னில் * சீர்க்கத்
தருமேல் * பின்னை யார்க்கு அவன் தன்னைக் கொடுக்கும்? **
கருமாணிக்கக் குன்றத்துத் * தாமரை போல் *
திருமார்பு கால் கண் கை * செவ்வாய் உந்தியானே 6

3519 செவ்வாய் உந்தி * வெண்பல் சுடர்க்குழை தம்மோடு[1] *
எவ்வாய்ச் சுடரும் * தம்மில் முன்வளாய்க் கொள்ள **
செவ்வாய் முறுவலோடு * எனதுள்ளத்து இருந்த *
அவ்வாய் அன்றி * யான் அறியேன் மற்றருளே 7

[1] தன்னோடு

3520 அறியேன் மற்றருள் * என்னை ஆளும் பிரானார் *
வெறிதே அருள் செய்வர் * செய்வார்கட்கு உகந்து **
சிறியேனுடைச் * சிந்தையுள் மூவுலகும் * தன்
நெறியா வயிற்றில் கொண்டு * நின்றொழிந்தாரே 8

3521 வயிற்றில் கொண்டு * நின்றொழிந்தாரும் யவரும் *
வயிற்றில் கொண்டு * நின்றொரு மூவுலகும் ** தம்
வயிற்றில் கொண்டு * நின்ற வண்ணம் நின்ற மாலை *
வயிற்றில் கொண்டு * மன்ன வைத்தேன் மதியாலே 9

3522 வைத்தேன் மதியால் * எனது உள்ளத்தகத்தே *
எய்த்தேயொழிவேன் அல்லேன் * என்றும் எப்போதும் **
மொய்த்தேய் திரை * மோது தண்பாற்கடலுளால் *
பைத்தேய் சுடர்ப் * பாம்பணை நம் பரனையே 10

3523 * சுடர்ப் பாம்பணை நம் பரனைத் * திருமாலை *
அடிச்சேர் வகை * வண்குருகூர்ச் சடகோபன் **
முடிப்பான் சொன்ன ஆயிரத்து * இப்பத்தும் சன்மம்
விட * தேய்ந்தற நோக்கும் * தன் கண்கள் சிவந்தே 11

**அடிவரவு:** இருத்தும் இருந்தான் அருள் மாய திகழும் பொருள்
செவ்வாய் அறியேன் வயிற்றில் வைத்தேன் சுடர் கண்கள்